IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 92/2014

Deposition of Witness : PW 3

Name : சம்பந்தமூர்த்தி (வயது – 63)

Father's Name /W/o : த/பெ பி.டி.சோனாச்சலம்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : அரக்கோணம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 12.08.2025.

## குறுக்கு விசாரணை 9 இருந்து 13 பிரதிவாதிகள் தரப்பில்

என்னிடம் காட்டப்படும் ஆவணம் வா.சா.ஆ – 9 நான் யாருக்கு எந்த ஆண்டில் எழுதினேன் என்றால் தீனதயாளனுக்கு 1996 ஆம் ஆண்டில்எழுதினேன். வா.சா.ஆ – 9 என்ன ஆவணம் பொது அதிகார ஆவணம். மேற்படி வா.சா.ஆ – 9 எந்த இடத்தில் நான் எழுதினேன் என்றால் அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே எழுதினேன். பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தவர், வாங்கியவர் , சாட்சி அளித்தவர் அனைவரும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே கையொப்பமிட்டார் என்றால் சரிதான்.

மேற்படி வா.சா.ஆ – 9 முழுமையாக தயார் செய்யப்பட்டு, முத்திரை கட்டணம் செலுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே எனக்கு அலுவலகம் தனியாக கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி கேட்டுக் கொண்டதன் படி தான் நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான்.